# THE TAMIL CATHOLIC ASSOCIATION, VICTORIA

## விக்டோரியா தமிழ் கத்தோலிக்க சங்கம்

**இளவேனிற் கால செய்திமடல் Sept 2012 Newsletter Spring Edition**


**25வது வருட வெள்ளி விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது....**

## 25TH ANNIVERSARY SILVER JUBILEE CELEBRATION INVITATION

**Thanksgiving Eucharistic Service Followed by Fellowship Dinner**

**on Sunday 21st October at 4.15 PM**

**at St. Andrew's Church, 76 Springs Rd, Clayton South**





**Chief Guest**

**Most Rev. Peter Elliott, DD MA STD VG EV**

*Auxiliary Bishop for the Southern Region*

**Guest of Honour**

Most Rev. Dr.Thomas Savundranayagam

*Bishop of Jaffna, Sri Lanka*

**You are invited to join with at the**

**Felicitation and Fellowship Dinner to be held at 6.30 pm**

**at St. Andrew's School Hall**

**DONATION TOWARDS DINNER $35/= (Adults) $15/= (Child)**

**Limited Tickets Are Available**

**இந்த இதழின் உள்ளே...**

**Inside this issue...**


ஆன்ம குருவானவர் செய்தி –
தலைவரின் சந்திப்பு -
புதிய செயற்குழு -
Our Plans for this year -
கிறீஸ்தவமும் வழிபாடும் -
TCAV Logo Competition-
நேர்காணல் -
TCAV Youth -
ஆசிரியர் செய்தி-
TCAV Woman –
செயலாளர்–பொருளாளர் பக்கங்கள் -
Cappuccino குடிப்போம் வாறீங்களா -
பணி தொடர்வோம்.. -


## TCAV MINI RAFFELLE

**ON SALE NOW**

*Proceeds from this project will be used for TCAV Community projects*

*Only $2.00 per Ticket*

*1st Prize: Two Return Air Tickets to Singapore*

*2nd Prize: Two Return Air Tickets to Gold Coast*

*3rd Prize: Two Return Air Tickets to Sydney*

*4th, 5th and 6th Consolation prizes: $100 Gift Vouchers*

## மாற்றங்கள் தேவை தான்...

ஆம் புதிய நிர்வாகம், புதிய பொறுப்புகள், வெள்ளி விழா ஆயத்தங்கள்... தலைக்குமேல் வேலை.... இது போதாது என்று இந்த “இளவேனிற் கால செய்தி மடல்” அச்சு வடிவத்தில் வேறு...

செய்தியும் தொடர்பும் தேவை தானா?

சில வருடங்களாகவே நாம் மின் அஞ்சல் வழியாக மட்டும் தொடர்பு கொண்டு அதை நிவர்த்தி செய்யலாம் என நினைத்தோம். ஆனால் எமது செய்தி மடல் உங்கள் மின் அஞ்சல் கழிவு அறையில் சங்கமிப்பதை விட, அச்சடிக்கப்பட்ட செய்தி மடல்களாக குளியலறையில் தவழ்ந்து, அது தரமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் உங்கள் இருக்கை அறையை அடைந்து ஒரு 2-3 நாட்களாவது பந்தி பரிமாறும் மேசையை அடையவேண்டும் என்பதே நோக்கம்.

அதன் முதல் பரிமாணம் தான் இந்த “இளவேனிற் கால செய்தி மடல்”. உங்கள் ஆதரவை பொறுத்து எமது சங்கத்தின் செய்தி மடல் இனிமேல் வருடத்துக்கு மூன்று அல்லது நான்கு முறை அச்சடிக்கப்பட்ட செய்தி மடல்களாக வெளிவரும். செய்தி மடலின் ஆக்க வேலைகள் கடினமானதென்றாலும் கூட, அச்சாகும் மற்றும் தபால் செலவுகள் தான் குறைந்த செய்தி மடல்களின் வெளியீட்டுக்குக் காரணம்.

ஒரு மாதிரிக்காக இந்த மடலில் பொழிவும், மெருகூட்டலும் ஒன்று சேர்ந்திருக்கிறது. செய்தி மடலின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறு ரசனையுள்ள அங்கத்துவர்களை ஈர்க்கும் வகையில் இந்த மடல் தொகுக்கப்பட்டிருக்கிறது. இறை வழிபாடு பற்றிய தொகுப்புகள் இந்த இதழில் சற்று குறைவாகவே இருப்பது மன வருத்தம் தான். செய்திகளையும் தரமான ஆக்கங்களையும் நீங்கள் தரும்போது இதன் மெருகு இன்னும் கூடும் என்பது எமது அபிப்பிராயம். செய்தி மடலைத் திருப்பிப் பாருங்கள்,

தயவு செய்து விமர்சியுங்கள்.

எமது பத்திரிகையாசிரியர் திரு. ரதீஸ்காந்த் விடுமுறையில் இருப்பதால், அவர் சார்பாக நாம் சந்திக்கிறோம். அடுத்த மடலில் ரதீஸ்காந்த் உங்களோடு உரையாடுவார்

நன்றி

**செய்தி மடல் ஆசிரியர் குழு**



## Cappuccino குடிக்கலாம் வாறீங்களா..

Your say and your view... A section for open chat

உங்கள் பார்வைகளும், விமர்சனங்களும்... உரையாடல் பகுதி

Please send your comments and views via e-mail or SMS to us



Email - tcavinfo@gmail.com

SMS only - 0468 771 015

❄ எல்லா தமிழ் பூசைக்கும் நாங்கள் வரவேண்டும் என பொதுவாக எதிர்பாராப்பது சாத்தியப்படாத ஒரு விஷயம். 100 காரணங்கள் பலருக்கு இருக்கும். எனவே, TCAV குறிப்பிட்ட சில தமிழ் பூசைகளை விசேஷப் படுத்தி (உ+ம்.. சிறுவர் – இளைஞர் தினமும் International Food Festival by Kids, முதியோர் தினமும் நகைச்சுவைப் பட்டிமன்றமும்) அதில் அதிகப்படியான நம்மவர் கலந்து கொள்ள திட்டமிடவேண்டும். *– ஜீவா & யசோ*

❄ எமது விசேட பூசைகள், கலைநிகழ்ச்சிகள் (பெரிய வெள்ளி, நத்தார், புதுவருடம்) பெரும்பாலும் சீராக தொகுக்கப்படாததால் தொய்வடைந்தது போலவும், குறிப்பாக எங்கள் பிள்ளைகளிடம் (Too Long.. Boring..) என்ற வசைகளையே வருடா வருடம் பாடுகிறது. இதை கொஞ்சம் கவனிக்கலாமே? *– விக்டோரியா*

❄ மற்றைய சங்கங்களோடு ஒப்பிடுகையில் எமது TCAV மிக நலினமாகவும் யாரையும் வற்புறுத்தாமலும் தான், 25ஆ ண்டுகளை கடந்து வந்திருக்கிறது. இதற்குக் காரணம் எமக்கு பல வசதிகள் எமது வதிவிட ஆலயங்களிலேயே இருப்பதே. இந்த முறையிலேயே நாம் பழக்கப் பட்டு இருப்போமானால், எமது மொழியோடு இணைந்த நல்ல பல வழிபாடுகளையும், இனிய ஊர் நினைவுகளையும் இழந்து விடுவோம். கவனமும், எதிர்கால சிந்தனையும் அவசியம் தேவை. *– ராஜன்*

❄ மடுமாதா, வேளாங்கன்னி மாதா திருவிழாக்களில் கூட்டமும் பக்தியும் நிறைந்திருக்கிறது. அண்மையில் நடந்த இரண்டு திருவிழாக்களிலும் மரியாளின் அருளினால் நன்மை பெற்றவர்கள் கூறிய வாக்கு மூலங்கள் புல்லரிக்க வைத்தது. *– குலாஸ் குடும்பத்தினர்*

❄ ஐக்கியம் – Fellowship என்றெல்லாம் நீங்கள் பேசுகிறீர்கள், யாரும் முன்வந்து சிறப்பிக்கிறார்கள் இல்லை என்றும் குறை படுகிறீர்கள். முதலில் எங்கள் இளசுகளுக்கு, அவர்கள் ரசிக்கக்கூடிய விளையாட்டு போட்டியொன்றை (Netball, Indoor Tennis or Cricket Tournament), நடத்திப் பாருங்கள். நிச்சயம் பெற்றோரும் சேர்ந்து பங்கு பற்றுவார்கள். *– குமார் & சாந்தி*

❄ வருடத்துக்கு ஒருமுறை Mulgoa Church or Retreat ஒழுங்கு செய்யலாமே. இதை விடவா ஒரு Fellowship கிடைக்கப்போகிறது. *– மைக்கேல்ராஜ்*




# THE TAMIL CATHOLIC ASSOCIATION, VICTORIA

P.O.BOX 481, ROSANNA, VICTORIA 3084, AUSTRALIA

A.B.N. 57 010 334 854 APPROVED CHARITABLE ORGANISATION VCGLR 58755

Email – tcavinfo@gmail.com SMS only - 0468 771 015

CELEBRATING 25 YEARS TCAV

## சந்திப்பு... In touch...

கிறிஸ்த்துவில் நிலைத்திருக்கும் அன்பின் சகோதர சகோதரிகளுக்கு என் தமிழ் வணக்கங்கள்.

இந்த வருடம் நாம் 25வது வருட வெள்ளி விழாவை கொண்டாடுகிறோம். எமது சங்கத்தில் பல பொறுப்புகளில் பதவி வகித்த என்னை, இந்த 25வது வருட வெள்ளி விழாவின் புதிய தலைவராக தேர்ந்தமைக்கு உங்களுக்கு என் மனமார்ந்த நன்றிகள். என்னோடு துணை நிற்கும் சக குழுவினருக்கும் எனது வாழ்த்துக்கள். இதைவிட மேலாக எம்மோடு துணைநின்று வழி நடத்தும் எமது ஆன்ம குருவானவர் அருட் திரு.அன்ரனி ஞானப்பிரகாசம் அவர்களுக்கும் என் சிரம் தாழ்ந்த நன்றிகள்.

இது மாதாவின் மாதம், மடுமாதா. வேளாங்கன்னி மாதா திருவிழாக்களும் செபமாலை பக்தியும். பிராத்தனைகளும் நம்மிடையே மென்மேலும் அதிகரிப்பதைக் காண்கிறோம். பழைய ஏற்பாட்டு காலத்திலிருந்து... தந்தை ஆபிரகாம் முதற்கொண்டு இறைவனின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டார்கள். ஆனால் மரியாள்! நம் தேவ தாயார். இறைவனின் வார்த்தைக்கு கட்டுப்பட்டு "உமது வார்த்தையின் படியே ஆகட்டும்" என்று உரைத்தது மனுக்குலத்தை மீட்ட கிறிஸ்துவின் ஆரம்பம், அது கிறிஸ்த்தவத்தின் ஆரம்பம்.

புதிய குழுவாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நாம். புதிதாக எதையும் சாதிக்க நினைக்கவில்லை. ஏற்கனவே இருக்கும் எமது சங்கத்தின் நல்ல பல செயல் திட்டங்களை மெருகேற்ற நினைக்கிறோம். இதற்கு முக்கியமாக நாம் செய்ய வேண்டியது. உங்களோடு தொடர்பில் இருந்து கொண்டே இருப்பது தான். மதமும், வழிபாடும் தனிமனித ஆன்மா சார்ந்தது. ஆனால் அதனைக் கட்டுக்கோப்பாக நடத்திச் செல்லத்தான் சமூகம், கலாச்சார பண்பாட்டு விழுமியங்கள், ஐக்கியம், சகோதரத்துவம் எல்லாமே அவசியமாகிறது. இது தற்போது எமது சங்கத்துக்கு நிறைய தேவைப்படும் ஒரு மருந்து. இதனை மெருகேற்றுவது தான் இவ்வருடத்தின் முக்கிய நோக்கம். பல செயற்திட்டங்கள் தொடங்கி விட்டது. உங்களுக்காக மட்டுமல்ல எங்கள் வாரிசுகளை அணைத்துக் கொண்டு அடுத்த படி மேலே போவதற்கே.

அதே முகங்கள், அதே உதவிகள்... காலா காலமாகக் செய்து வரும் ஒரு சில நல்ல உள்ளங்களை மறப்பது தர்மமாகாது. இந்த நேரத்தில் அவர்கள் அனைவருக்கும் எமது சங்கம் சார்பாக நன்றி கூறுகிறேன். நேரம் கிடைக்கும் போதிலே நீங்களும் உதவலாமே?

வெள்ளி விழாவை கொண்டாட ஆயத்தமாகும் எமது சங்கம். பல செயல் திட்டங்களை, இந்த வருடம் முழுவதிலும் செய்ய தயார்படுத்திக் கொண்டிருக்கிறது. குதூகலிப்போம்! கொண்டாடுவோம்!!
இது பற்றிய பல விடயங்கள் இந்த மடலின் பல இடங்களிலும் பிரதிபலிக்கும்.
முடிந்தால் இங்கே காணும் உங்கள் செயற்குழு அங்கத்தவரை அழைத்தோ, sms செய்தோ உங்கள் விமர்சனங்களை *(நல்லவை-திருத்த வேண்டியவை எதுவானாலும்)* கூறுங்கள். இதுவே தனித்து நின்று எமது சமூகத்துக்காக பாடுபடும் செயற்குழு நண்பர்களுக்கு கிடைக்கும் சன்மானங்கள்.

> **சிலை செதுக்க துவங்கி விட்டோம்! இப்போது தான் பெரும் பாறையில் முதல் உளி அடி விழுகிறது!**
> **சவால்கள், கஷ்டங்கள் இருக்கத்தான் செய்யும்! முயற்சிப்போம்!**
> **வெற்றிகளை அனுபவிப்போம்!! தோல்விகளை திருத்திக்கொள்வோம்!!!**
> **எங்கள் கத்தோலிக்க சமூகத்துக்கு நாங்கள் செய்ய தவறினால் வேறு யார் செய்வார்கள்?**

உங்கள் ஆக்கங்களும். விமர்சனங்களும் தேவை. தயவு செய்து நீங்களும் எம்மோடு தொடர்பில் இருங்கள். அதுவரை அன்போடு விடைபெறுகிறேன்

எலாடியஸ் பர்னாந்து (தலைவர்)

Religion and worship is a personal and sole related virtue. To discipline our life we unite religion with society, language, culture. Fellowship and friendship play a key role in our Christian life. As an association, we are lacking fellowship. This year, we have planned few projects which will make improvements to our core mission Worship, Fellowship and Friendship among us.

Our plans and strategies are explained in this newsletter. Please read and give your feedback.

***If anyone is interested in helping in any way, please feel free to contact us***
***We highly appreciate it!***

*Thank you*
*Regards.*
*Eladious Fernando (President)*

**We are proud to present our Silver Jubilee Year 2012 TCAV Committee**

**Chaplain**
Rev. Fr. Anthony Gnanapragasam
T : (03) 9551 5666
M : 0449 167 990
anthonygnanapragasam@yahoo.com

**President**
Eladious Fernando
T : (03) 9432 3204
M: 0403 476 744
efernando@optusnet.com.au

**Secretary**
S. Mariasegarampillai
T : (03) 9898 9939
M: 0427 427 428
pillaim@iinet.net.au

**Treasurer**
Alfred Reynald
T : (03) 9795 7798
M: 0439 302 597
alfredr@iprimus.com.au

**Vice President**
Jothi Felix 0425 843 182

**Asst. Secretary**
Xavier Godwin 0400 855 598

**Asst. Treasurer**
Manoraj Isidor 0428 851 106

**Editor**
P. Ratheeskanth 0413 916 360

**Religious Secretry (North & South)**
Alfred Pavilupillai 0407 309 755
Lucas Savariyar 0421 448 753

**Welfare Secretary North-South**
Cyril Kulendran 0425 760 328
<South - Position Vacant>

**Committee Members North- South**
1. S.Cornelius 0425 728 839
2. <North Position Vacant>
3. Anandarajan James 0431571 066
4. L. Moses 0423 709 352



# TCAV Plans and strategies for the next two fiscal periods

# எமது சங்கத்தின் திட்டங்களும், செயற்பாடுகளும் (இரண்டு ஆண்டுகளுக்கு)

## Targeted to Achieve

**அடுத்த கட்டம் விரைவில் ஆரம்பம்**

### Charitable Organisation

- Completion of ATO Paper works and ATO Approval

### Media and Public Relations and Communications

- Registering TCAV Main Logo and Sub Logos
- Finalising Design and Format of TCAV materials
- Launching TCAV Website
- Newsletter Publication – Three Issue per year

### TCAV Liturgy Programs

- "ஞான ஒடுக்கம் - Gnana Odukkam" and Day or Weekend outreach presented by special priest from South India **
- Day of outreach presented by special guest (priest or charismatic preacher from India or Sri Lanka)**

****Subject to Public Needs and Support**

### TCAV Ladies Auxiliary**


- Launching TCAV Ladies Auxiliary Activities (North and South Regions)
- Identifying needs and conducting workshops (North & South Regions )**
- Inauguration of TCAV Ladies Auxiliary Group.

### TCAV Tamil Affairs **

- Make our members aware that "Tamil Affairs" is part of our mission in addition to our primary missions "Worship, Fellowship and Friendship"
- Appointing a Team of Subject Matter Experts and well wishes to the sub team
- Organising Dialogue with Tamil Diasporas, Sri Lankan and Australian Government officials
- Continuously monitor "Tamil Issues" around the world (especially in Sri Lanka) and Lobby Australian Government

### TCAV Community Help to Tamils **

- A TCAV Sponsored After School Tuition
- TCAV Sponsored Adult/Youth Apprentice Training in Tamil Areas and/or Refugees in Sri Lanka or India



## Achieved or Work In Progress

**வெற்றிகரமாக நடப்பவையும், நிறைவேற்றியவையும்**

### AGM and New Committee Matters

- Finalising AGM Matters
- Appointing Unfilled Office Bearers
- First Committee Meeting and all follow-ups

### Charitable Organisation

- Charitable Organisation Approval

### Maatha Feast

- Celebration Madu Maatha Feast
- Madu Maatha Community Rosary
- Help and Assistance for Vellankanni Matha Feast if requested by Indian friends

### TCAV Silver Jubilee

- Organising Silver Jubilee & Planning
- Invitation and acceptance by Jaffna Bishop Most.Rev.Thomas Souvndaranayagam
- Invitation to Special Guests & VIPs
- TCAV Tamil Affairs arrangements prior to Bishops visit
- Release of Silver Jubilee Tickets for sale

### Media and Public Relations and Communications

- Design and Release of TCAV Logo
- Release of TCAV Spring Edition Newsletter

### TCAV Mini Raffle

- Planning, Designing and Printing Tickets
- Release of Tickets to Public

இவை திட்டமிடலில் இருந்து நிறைவு பெறுவதற்கு உங்களின் முழு ஒத்துழைப்பு இருந்தால் மட்டுமே சாத்தியப்படும்

SMS இல் இறை மகிமையை பறைசாற்றுவோம்

Please share with us, your experience with GOD



- Praise D Lord. God, has blessed us abundantly. Our New Hme Buldng just Started *J & J*
- Our family in grAt peace & full filed aftr comng 2 Velaankani Maatha feast. Thanks *Private*

Email-tcavinfo@gmail.com SMS Only-0468771015

# TCAV LOGO COMPETION

A Logo is something unique and from a communication point of view, it is a very important object to identify our association in a public arena. Due to the complexity and enormous time and duration involved, our President appointed and conducted a closed competition among selected subject matter experts and well-wishers of TCAV. The response was extremely good, we would like to thank all the contributors who submitted their art work on time.

After careful consideration and numerous iteration, our judges Mr.William Rajendram and Mr.Pillai Mariasegaram selected a proof of concept – model draft for technical and computer aided sketching. What you see below is the final birth of our TCAV Logo. The judges have nominated Mr.Jude Antonimuttu and Mr.Emarson Victoria as the finalists of TCAV Logo competition and Mr.George Bharani as the best concept designer of our TCAV logo.

We present here our New TCAV Logo and all its subsidiary logo's which we will be using wherever appropriate. Thanks to all those who participated in the competition. A small gift of token will be awarded to our finalists.

## TCAV LOGO YOUR SAY.... BEST EXPRESSION WILL WIN A PRIZE!











*Pictures have thousands of expressions*

*Now it is your time to say more about our logo...*

*Hey Guys!*

*Our New TCAV logo has plenty of religious thoughts, objectives, language, race, colours, letters etc. embedded and submerged into it.*

*Please list whatever you can observe and imagine in our main TCAV Logo.*

*The best and most appropriate winning contribution will be awarded a gift by TCAV in a Silver Jubilee Event. There is no age limit, so why not use your graphical imaginations?*

**TCAV Youth** is a section we like to introduce in our newsletter to integrate with our adolescent members.

**PLEASE SEND YOUR ARTICLES ON VIEWS, EXPERIENCE AND SOCIAL ACTIVITIES YOU ARE INVOLVED.**

TCAV E-mail or sms - Email – tcavinfo@gmail.com SMS Only - 0468 771 015



Project Diary…

## Fiji & Soloman Island Study Tour

Minto Felix

"Freedom to able to live out one's dreams. Freedom to love and be part of a community. And freedom to shine bright in the world as a person, and as a society of dignity. And those freedoms, regardless of circumstance or challenge is worth fighting for, now and always."



This was the most valuable lesson I learnt travelling through Fiji and the Solomon Islands, on a three week study trip, "Our Generation's Challenge," with the Oaktree Foundation – an entirely youth and volunteer run aid and development organisation, where I've been working for the past year.

For me personally, the trip was also an incredibly valuable opportunity to gain an insight into the life experiences and challenges, faced by young people in the Pacific.

When framing an exploration of the lives of young people in the Pacific, it's important to note that the island nations are not a homogenous group. Whilst there are cross cutting themes and many similarities, there are also a remarkable number of differences. Our time in Fiji highlighted some key issues facing young people, including that of employment concerns and educational opportunity. These were interrelated with frustrations about corruption and the steadily increasing cost of living. The voices of young people and their contributions were also identified as being neglected, in a society that is dominated by institutions based on autocratic and cultural forms of decision-making. The landscape for young people in the Solomon Islands shows a similar diversity of challenges, but at far more pronounced and damaging levels, and with far reaching impacts for the broader society

But this trip was powerful – it was thought provoking, it was rejuvenating, but most importantly, it was a poignant reminder that despite the difficult faces of hardship, those who are in a position to take positive action, and meaningfully contribute **must** do so. And furthermore, most work to understand the importance of, and promote a world of global equality.

To find out more about the work of the **Oaktree Foundation**, visit - theoaktree.org



## Good Things I can do… which don't cost much time or money

*Kaushini Fernando*

Human nature is an ambiguous concept; no one can really fully understand it.

Communication between humans is paramount. Without this, humans cannot fully express their true feelings and keep in touch with the ones that they love.

With today's technology, we communicate to each other using phones, the internet, media and many more mediums.

There is really no excuse why you can't keep in contact with a friend or a loved one – even if they are living half way across the world.

If you think back to nearly 130 years ago, people sat down and wrote hand written letters; sharing their feelings and thoughts on paper and sending them to the person they wanted to communicate with.

So simple call, text message, email or even letter can make the biggest difference to someone's life. Someone who may be going through a rough time, someone who may feel like they don't have anyone who cares about them, or even someone who you may have lost contact with because you didn't communicate with them.

It's part of human nature to want to feel loved and accepted, so make this happen for someone in your life starting today.






**GOURMET SPICE MERCHANT**

*Authentic Indian-Sri Lankan Gourmet*

**FULLY CATERED EVENT MANAGERS**

**Fusion dishes are our speciality**

**try us first, for a true taste of authentic dishes**

Contact **Roy Lambert**

**0425725262**


**HAPPY BIRTHDAY**

**Please email special birthdays such as**

**1st, 18th, 21st, 50th, 60th, 75th and above**

**Happy Anniversary**

Cyril & Yamini

Guna & Vathani

John & Glory

William & Shaki

Eladious & Sri

TCAV

# கிறீஸ்தவமும் வழிபாடும்

**தமிழில் திருப்பலி**

**மாதத்தின் 2வது ஞாயிறு – 3.30 pm St.Gerard's Church, Dandenong North**

**மாதத்தின் 3வது ஞாயிறு – 3.30 pm St.John's Church, Heidelberg**

உங்கள் ஆக்கங்களை முடிந்தால் தமிழிலே தட்டச்சு செய்து அனுப்பவும். கட்டுரைகள் வேறு எங்கிருந்தாவது பெறப்பட்டால், அதனையும் குறிப்பிட மறக்க வேண்டாம்

Please send your articles and messages via e-mail or sms to us Email – tcavinfo@gmail.com SMS Only - 0468 771 015

**இறை வார்த்தைகள், தேவ கருத்துக்கள், செய்திகள், அறிக்கைகள், விவிலிய கூட்டங்கள் பற்றி பகிர்ந்து கொள்வோம்.**

**நத்தார் வெளியீடு தயாராக ஆக்கங்கள் தேவை**

நன்றி
கத்தோலிக்க அருங்கொடை மறுமலர்ச்சி இயக்கம்

## இறைவன் வாழும் இல்லம்

இறைவனை வழிபடும் இடத்தை நாம் அழகிய தமிழில் கோயில் என்கிறோம். கோவில் என்பதும் இலக்கணப்படி சரிதான். அதாவது இறைவன் வாழும் இல்லம். மக்கள் ஒன்றாகக் கூடி அவரை வழிபடும் இடத்தில் அவர் வாழ்கிறார் என்பது சரிதான்.

இதன்படி யூ தர்கள் எருசலேமில் இறைவனின் இல்லத்தை அமைத்து வழிபட்டு வந்தனர். அவர்களுக்கு ஊர்தோறும் வழிபாட்டுக் கூடங்கள் இருக்கவே செய்தன. ஆனால் எருசலேமில்தான் பலிகள் கொடுக்கும் திருக்கோவில் இருந்தது. அவ்வாலயத்தை எழுப்பும் முன்னர் ஆங்காங்கே கற்களை அமைத்து பலிகளைக் கொடுத்துக் கொண்டு வந்தபோது சில வேளைகளில் வழிபாடுகள் முறைகேடாகவும் நடப்பதுண்டு. இதனால் முக்கிய வழிபாடுகளை எருசலேம் கோவிலை மையமாகக் கொண்டு நடாத்தி வந்தனர்.



முதல் திருக்கோவிலை மன்னர் தாவீது கட்டவிருந்தாலும் அவரால் அது முடியாமற்போக சாலமோன் அதனைக் கட்டினார். பிற்காலத்தில் அந்நியர் படையெடுத்து வந்தபோது இக்கோவில் தரை மட்டமாக்கப்பட்டது. இதையிட்டு யூ தர்கள் மிக வேதனைப்பட்டார்கள். அவர்களுடைய ஆன்மீகம் ஆலயத்தைச் சுற்றியே இருந்தது. தற்போது ஆலயம் இல்லாமல் ஆண்டவரை எங்கே காண்பது என்ற கேள்வி அவர்கள் மத்தியில் எழ, இறைவாக்கினர்கள் அவர்களுக்கு ஆண்டவர் எங்குமிருக்கிறார், நாம் எங்கேயும் அவரை வழிபடலாம் என்று தேறுதல் அளித்தார்கள். இதன்படி பாபிலோனியாவின் அடிமைத்தனத்திலும்கூட அவர்கள் ஆண்டவரை மறக்காமல் தொழுது வந்தார்கள். தானியேல் எருசலேம் இருந்த திசையை நோக்கி மன்றாடினார் என்பதை நாம் அறிவோம்.

காலப்போக்கில் பாபிலோனியாவிலிருந்து விடுதலை பெற்று வந்த மக்கள் மீண்டும் அந்தத் திருக்கோவிலை எழுப்ப துணிந்தனர். அது ஓரளவே வெற்றியைத் தந்தது. நமதாண்டவர் காலத்திற்கு சில தசாப்தங்களுக்கு முன்னரே அந்தப் பணி தீவிரமாயிற்று. ஏரோது மன்னர் காலத்தில் அது நிறைவேறிற்று. ஏரோது மக்கள் மனம் கவர்ந்த மன்னன் அல்லன். தன் ஆட்சியைத் தக்க வைத்துக்கொள்ள மக்களைத் திருப்திப் படுத்தவேண்டும் என்று ஆலயக் கட்டுமானப் பணியை ஆரம்பித்தான். ஆண்டவர் காலத்தில் அது 46 ஆண்டுகளாகக் கட்டிக்கொண்டிருக்கப்பட்டது.

இந்த ஆலயத்தில் பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டதால் பலிப்பொருட்களை மக்கள் விலை கொடுத்து வாங்கவென கடைகள் திறக்கப்பட்டிருந்தன. சுறுசுறுப்பாக வியாபாரம் நடைபெறும். பலிக்குக் கொண்டு வரப்படும் மிருகங்களும் பறவைகளும் குறைவற்று இருக்க வேண்டும் என்றபடியால் ஆலயக் கடையில் அவற்றை வாங்குவதை அதிகாரிகள் வற்புறுத்தினார்கள். இதனால் ஆலயம் ஒரு வியாபார நிலையமாக மாறிக்கொண்டு வந்தது. அதுபோக ஆலயத்தில் மனித, விலங்கின உருவங்கள் பொறிக்கப்பட்ட நாணயம் பாவித்தல் தடை செய்யப்பட்டிருந்தது. எனவே மக்கள் தாம் கொண்டு வரும் நாணயங்களை ஆலயத்தில் பாவிக்கவில்லை மாற்று நாணயமாக (டோக்கன் போல) மாற்றுவதும் உண்டு.


இவை எல்லாவற்றையும் விட இங்குள்ள வியாபாரிகள் மக்களை துன்புறுத்தி அதட்டி தாம் வைத்ததே சட்டம் என நடந்து கொண்டிருந்தார்கள். ஆலய அதிகாரிகளும் தம் தன்னலம் காரணமாக இந்த அட்டூழியங்களைக் கண்டும் காணாததுபோல் இருந்தார்கள்.

இதனால்தான் ஆண்டவர் இங்கே கடுஞ்சினம் கொண்டவராய் ஆலயத்தை தூய்மை யாக்குகின்றார்.



அன்பே உருவான ஆண்டவர் இயேசு இவ்வாறு கடுமையாக நடந்து கொண்டது நமக்கு ஆச்சரியம் அளிக்கலாம். ஆம்! எனக்கு எவராவது துன்பம் விளைவித்தால் அவரை மன்னிப்பேன், பொறுத்துக்கொள்வேன். ஆனால் எனது தந்தையின் இந்த தேவ ஆலயத்தை அசிங்கப்படுத்துபவரையும் என் மக்களை துன்புறுத்துபவர்களையும் நான் சகிக்க மாட்டேன் என்கிறார் ஆண்டவர். இதுபோல நம் அயலவர் ஒருவர் துன்பத்திற்குட்படுத்தப் பட்டால் நாம் வாளாவிருக்கக் கூடாது. நாம் அங்கே ஆக்கபூ ர்வமாகச் செயல்பட்டு அவர்களைக் காக்க வேண்டும்.

அத்தோடு, இன்று நாம் காணவேண்டியது ஆண்டவருடைய திருக்கோவிலாகிய நமது உடலை நாம் எவ்வாறு பேணுகின்றோம் என்பது. இதன் தூய்மையைக் காப்பதும், அயலவர்தம் உடல்களை தூய்மையாகப் பேணுவதும் நம் கடமையாகும். நம் உடல் தூய ஆவியாரின் ஆலயம் என்பதை நாம் உணர வேண்டும். நற்செய்தியில் ஆண்டவர் குறிப்பிடும் ஆலயமும் அவரது திரு உடலேயாகும். ■



மரித்த ஆத்துமாக்கள் நினைவு

**Basilica James Dias** தலைமன்னார், இலங்கை
- திருமதி மேரி கொர்னேலியஸ் அவர்களின் தாயார்

**Marriyamma Stanislaus** புத்தளம், இலங்கை
- திரு.ஜெயாநந்தன் ஸ்டனிஸ்லோஸ் அவர்களின் தாயார்

உங்கள் அறிவித்தல்களை E-Mail முலமாக எமக்கு தெரியப்படுத்துங்கள்

# தமிழ் கத்தோலிக்க சங்க மங்கையர் குழு
# TCAV Ladies Auxiliary Group

Email – tcavinfo@gmail.com
SMS Only - 0468 771 015

## ஏன் இந்த TCAV Ladies Auxiliary குழு?

நாம் எமது TCAV சங்கத்தின் உப சங்கமாக **TCAV Ladies Auxiliary Group** ஒன்றை ஆரம்பிக்கவுள்ளோம்.

<u>இதன் முக்கிய நோக்கங்கள்:-</u>

- *TCAV க்கு ஒரு satelite குழுவாக துணைபுரிதல்*
- *விவிலிய மற்றும் செபமாலை பக்தியை எம்மிடையே வளர்த்தல்*
- *எமது சகோதரிகளின் ஆன்ம மற்றும் சமூக நல திட்டங்களை மேம்படுத்துதல்,*
- *எமது இளையோரை(Youth) ஓரளாவுக்காவது எம்மோடு இணைத்தும், அணைத்தும் அடுத்த படிக்கு கொண்டு செல்லுதல்*

இங்கே தலைமையோ, குழுக்கூட்டங்களோ இருக்காது. A casual and informal friendship group.

எமது சங்கத்தை இன்னும் பல ஆண்டுகள் நடத்தி நாம் ஓய்வு பெரும் காலங்களில் ஒரு ஆராதனையோ, விவிலிய வழிபாடோ, திருப்பலியோ, அல்லது ஓய்வு விடுதியில் இளைப்பாற சந்தர்ப்பம் கிடைக்கும் பட்சத்தில் தமிழில் வழிபட கிடைக்கவில்லையே என ஆதங்கப்படுவதை தடுப்பதற்காக செய்ய வேண்டிய ஆழ்நிலை திட்டமே (Strategic Planning) இது.

இந்த தார்மீக கடமையை, தாயாகவும்-தாரமாகவும் இருக்கும் எமது மாதரால், நோகாமலும், ஓசைபடாமலும் நிறைவேற்ற முடியும் என நாம் நம்புகின்றோம்.

ஒரு பரீட்சார்த்த 1 அல்லது 2 ஆண்டுகால முயற்சிதான், வெற்றியின் சிறு அறிகுறிகள் தெரிந்தாலும் பேரானந்தமே! தோள்வி என்றால் முயற்சித்ததில் ஒரு திருப்தி இருக்கும். இழப்பதற்கு ஒன்றும் இல்லையே?

அந்த வகையில் நீங்களும் எம்மோடு இனையவேண்டும் என ஆவலாய் உள்ளோம். சமூக மற்றும் நம் கத்தோலிக்க மேம்பாட்டுக்கு உதவ எல்லோருக்குமே ஆசைதான். ஆனால் “இந்த நேரம்” தான் கிடைப்பதில்லை.

இது பற்றிய ஆரம்ப கலந்துரையாடலை North - Mill Park-Bundoora and South - Dandenong-Moorabbin இடங்களில் வைக்கத் தீர்மானித்தோம். ஆனாலும் முதல் முயற்சியில் உள்ள ஒரு பயம், எல்லா பொறுப்புகளையும் தலையில் போட்டுக் கொண்டு எதையுமே உருப்படியாக செய்யத் தெரியாத கூட்டம் இது என்ற அவச்சொல் கிடைக்குமோ என்ற யோசனை. எனவே முதல் கலந்துரையாடலை Mill Park இல் வைத்தோம் வரவேற்பு திருப்திகரமாக இருப்பதால் விரைவில் Dandenong இல் உங்களைச் சந்திக்க உள்ளோம்.

ஏன் நீங்களும் கிடைக்கும் நேரத்தில் குழந்தைகளை உங்கள் கணவரிடம் கொடுத்து விட்டோ அல்லது ஒரு cappuccino outing ஆக நினைத்துக்கொண்டோ உங்களுக்கு பயன் தரக்கூடிய சில நிகழ்வுகளில் பங்கெடுக்கலாமே?

மேலதிக விபரங்களுக்கு இந்தப் பகுதில் உள்ள விளம்பரத்தை பார்த்து எம்மோடு தொடர்பு கொள்ளுங்கள்.

## Are you interested in following crash workshops

(Workshop Cost Partly Subsidised by TCAV)

**Tailoring Style Sewing****
(Blouse & Churithar Making workshop)




**Cake Icing & Decoration****




**Sugar Craft****
(Cake Décor, Flowers making)



**Airbrush Cake-Icing****



**Food & Vegetable Carving****



**Bible Study & Meditation****



“TCAV Ladies Auxiliary” is about to start series of Workshops in North & South Region for you. The workshops are friendly, <u>member to member exchange style workshops</u> for you to benefit

(** Depending on the participation & help these workshops will be conducted)

### NORTHERN REGION – MILL PARK

**Tailoring Style Sewing**
**“Saree Blouse & Churithar”**
**Strictly Not A Beginner Class**

Beginners, please keep in touch with our members for future classes

**Commencing Sat 6th October 2 – 4.30pm**

(Workshop Cost Partly Subsidised by TCAV)

Limited seats are available. Please contact us

### SOUTHERN REGION – DANDENONG

Interested members please contact us via email.
Group discussion date & venue will be notified



## பணிதொடர்வோம்...

*Cornelius*



இலங்கை வாழ் தமிழ் மக்கள் தம் சொந்த இடங்களிலேயே சிறைகளிலும், தடுப்பு முகாம்களிலும், இராணுவக் கட்டுப்பாட்டிலும் காலம் கழிக்கிறார்கள். இன்னும் பலர் சிறைகளில் எந்த வித விசாரணையுமின்றி அடைபட்டிருக்கின்ற அவல நிலை வேறு. இன்னும் பலரோ தடுப்பு முகாம்களிலும், சிவில் நிர்வாகம் குறைந்த நிலையில் இராணுவ அதிகாரத்தில் சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கப்பட்டு விட்டார்கள். இது மட்டுமல்ல 1983 இனக்கலவரத்தை தொடர்ந்து இந்தியாவில் தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கானோர் அகதிகளாகவே 30ஆண்டுகளுக்கு மேலாக இன்னும் இருப்பது மிகுந்த வேதனையைத் தருகிறது.

போர் முடிந்து விட்டது, சமாதானம் வந்து விட்டது என இலங்கை அரசாங்கம் கூறினாலும், ஏன் எமது இளைஞர், யுவதிகள் நாட்டை விட்டுத் தப்பி ஓடுகிறார்கள்? வெளிவரும் மனித உரிமை அறிக்கைகள், Amnesty International விவரங்கள், மற்றும் அண்மையில் யாழ் மேற்றாசன சமாதனத்துக்கும், நீதிக்குமான குழுவினாலும் வெளியிடப்பட்ட அறிக்கை மற்றும் மன்னார் ஆயராரின் ஜனாதிபதிக்கான கடிதம் என்பன இவர்கள் ஏன் நாட்டை விட்டு தப்பி ஓடுகிறார்கள் என்பதை எமக்கு தெளிவு படுத்துகின்றது.

இதன் மறு விளைவாகப் பலரும் (விஷேசமாக இளைஞர்கள்) அகதிகளாக எமது அவுஸ்திரேலிய கண்டத்தை நோக்கி வந்த வண்ணம் உள்ளனர்.இங்கு படகுகளிலே வந்து இறங்கும் நம்மவர் நிலை என்ன? அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்ன? அவர்கள் அனைவருமே பொருளாதார நலன் கருதி வந்தவர்கள் என முத்திரை குத்தலாமா? எமது தமிழ் இளைஞர், யுவதிகள் ASIO கூறுவது போல திருப்பி அனுப்பப்பட இருப்பது நியாயமானதா? இப்படியான இழிவுகளும் இழப்புகளும் அவுஸ்திரேலிய வாழ் மற்றைய பல் கலாச்சார இனங்களுக்கு ஏற்பட்ட போது அவர்கள் என்ன அரசியல் மற்றும் மனித நேய சாணாக்கியங்களை பயன்படுத்தி வெற்றி பெற்றார்கள்? சமூக சிந்தனையும் தமிழ் உணர்வு கொண்ட ஒரு சிலராவது சிந்திக்க வேண்டும்!

இவ்வருட 25ஆவது வெள்ளி விழாவை விமரிசையாகக் கொண்டாடும் எமது விக்டோரிய தமிழ் கத்தோலிக்க சங்கம், அரசியல்-இனம்-சாதி-மத சார்பற்ற ஒரு நடுநிலை நிறுவனமாக அரசாங்கத்தாலும், பலராலும் கருதப்படுவதால், ஏன் எமது தமிழ் மற்றும் ஏனைய அமைப்புக்களை ஒருங்கினைத்து இலங்கையில் ஓரளாவுக்காவது நிம்மதியான சீவியம் நிலவ வழிசெய்யக் கூடாது?
ஆன்மீக வழிபாடு! ஆன்மீக செயல்கள்! மட்டும் தானா கிறிஸ்தவம்!
சிந்திப்போம் செயல்படுவோம்!
அல்லல் படுவோருக்கு ஆறுதல் அளிக்கும்படி நம் ஜேசு கூறிச்சென்றார். மனித குல மீட்பராகிய ஜேசு கொண்டு வந்த சந்தோஷம், சமாதானம், விடுதலை நம் உறவுகளுக்கும் கிடைக்க எம்மாலான உதவிகளை செய்து பணி தொடர்வோம் வாருங்கள்!

## TCAV Approved Charitable Organisation

## TCAV அங்கீகரிக்கப்பட்ட சமூக சேவை நிறுவனம்

எமது சங்கம் TCAV அங்கீகரிக்கப்பட்ட சமூக சேவை நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது (VCGLR Approval No 58755 ) என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்.

இது பல வருடங்களுக்கு முன் முயற்சிகள் எடுத்தும் சில பல நிர்வாக அமைப்பு சிக்கல்களால் சாத்தியப்படாமல் இருந்தது. பத்து வருடங்களுக்கு செல்லுபடியாகும். இந்த அங்கீகாரம், எமக்கு பல நிதி உதவி திட்டங்களை இலகுவாக்க பெரிதும் உதவுகிறது. இதன் அடுத்த கட்டமாக "வருமான வரி இலாகா" (ATO) காரியங்களை நிவர்த்தி செய்ய இருக்கிறோம்.

**TCAV .. an approved charitable organisation.**
We are glad to inform you that our TCAV has been granted "Approved Charitable Organisation till July 2022. (VCGLR Approval No 58755)
It is a long awaited good news for us. We were unable to apply previously, due to our constitution and administration complexities. The new recognition has given us new potential in raising our community aid funds. We are in the process of finalising ATO Tax formalities.
**Alfred Reynold (Treasurer)**

## Message from our Secretary

Our TCAV Secretary is away on holiday.

Sorry, we were unable to obtain his article on time.

Our Secretary will exchange his usual topic with you in our "TCAV Christmas Newsletter Edition".

## எமது ஞானதந்தையின் செய்தி..... Message from our Chaplin

கிறீஸ்த்துவின் என தருமை சகோதர சகோதரிகளே, உங்களுக்கு என் தமிழ் வணக்கங்கள்!
புதிய குழு, புதிய செயற்பாடுகள் எல்லாமே, எனக்கு ஒரு புது உற்சாகத்தைத் தருகிறது. புதிய குழுவுக்கு எனது வாழ்த்துக்கள். இது எமது 25ஆவது வருட வெள்ளி விழா ஆண்டு என்பதால் பல ஆயத்தங்கள், நிகழ்ச்சிகள் அதிகப்படியாக நடப்பு ஆண்டு குழுவுக்கு கிடைத்து விட்டது. நீங்களும் அவர்களோடு துணை நின்று எமது தமிழ் கத்தோலிக்க சங்கத்தின் தேவைகளையும், சிறப்பையும் வளர்க்க வேண்டும்.

இம் முறை மடுமாதா மற்றும் வேளாங்கண்ணி மாதா திருவிழாக்களில் கூடிய பங்கெடுப்பையும், பக்தி சிரத்தையையும் கண்டு என்னோடு கூட சக தமிழ் குருவானவர்களும் சந்தோஷப் பட்டோம். விசேஷமாக மடுமாதா திருச்சுரூப வீடு தரிசனம் ஒரு குடும்பம்-நண்பர் அந்நியோன்னியத்தை செபமாலை நொவினா மூலமாக மேலும் வளர்ப்பதை காண்கிறேன்.

வருகின்ற Oct'21ந்திகதி வெள்ளி விழாவில் எமது ஆயரை, நீங்கள் அனைவரும் ஒரே குடும்பமாக வந்து வரவேற்று முழுமையான பங்கேற்கவேண்டும் என்பது எனது ஆவல். உங்களை ஆவலோடு எதிர்பார்கிறேன். அதுவரை கிறீஸ்துவின் அன்பில் விடை பெறுகிறேன்.
***அருட் திரு அன்ரனி ஞானப்பிரகாசம்***

***திருவள்ளுவர் கூறுகிறார்... "அரசியல் பிழைத்தோர்க்கு அரமே கூற்றாகும்"***
***அரசியலிலும் பெறும் பொறுப்புகளிலும் இருப்பவர்களிடம் நீதி அல்லது நேர்மை உணர்ச்சி இல்லையேல், அவர்களை, அவர்களின் அறமே அழித்துவிடும். இதற்கு எத்தனையோ பேரரசுகளும், சாம்பிராச்சியங்களும் அழிந்தமையே ஒரு சாட்சி.***

## நேர்காணல்

அண்மையில் இலங்கை வடமாராட்சி பகுதியில் இறை ஊழியம் செய்பவரும், பல சமூக நலன் திட்டங்களை மேற்கொண்டு நடத்துபவருமான வண.பிதா. (பெயர் மறைக்கப்பட்டு இருக்கிறது) மெல்பேர்ன் வருகை தந்திருந்த போது நடைபெற்ற நேர்காணல் இங்கே

TCAV - வழமையான கேள்வி.. எப்படி இலங்கை நிலவரங்கள்?

வண. பிதா - *எங்கே ஆரம்பிப்பது? எங்கே முடிப்பது? சனங்கள் உடமைகள், உறைவிடம், செந்தங்கள் என எல்லாத்தையும் இழந்து விட்டார்கள். வேதனைகள் ஆயிரம் ஆயிரம். ஆனாலும் தமிழருக்கே உரித்தான "இனியும் தலை தூக்கி நிற்க வேண்டும்" என்ற வைராக்கியமும், கனவையும் சுமந்து கொண்டு வானத்தை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் விடிவு வரவில்லை.*

TCAV - அப்படியானால் இலங்கை அரசாங்கம் கூறும் அபிவிருத்தி, மீழ் குடியேற்றல், அகதிகள் மேம்பாடு, இவை எல்லாம் பொய்யும் கண்துடைப்பும் தானா?

வண. பிதா - *இலங்கை அரசாங்கத்தின் அபிவிருத்திகள் நடை பெறத்தான் செய்கின்றன. ஆனால் அவை மிக மிக பரந்த அளவில் ஆராயப்பட்டு, பயங்கரவாத பின்னனி சிக்கல்கள் அலசபட்டு ஆக்கம் பெறுவதற்கும், இடைத்தரகர்களின் சுருட்டல்களுக்கும் இடையே சிக்கி 30% பலன் தருவதற்குள் ஒரு சகாப்தமே முடிந்து விடும்.*

*தேவைகளோ இந்த கணப்பொழுதில் கோடிகளில் தேவைப்படுகிறது. ஆனால் அராசாங்கத்தின் திட்டமிடலோ அதன் பலன்களோ "லட்சியத்தில் மட்டும்தான் தெரிகிறது". இது இரண்டும் சந்திப்பதற்குள்...*

*ஒரு சந்ததி அழிந்து விடும்! இன்னொன்று முதுமை அடைந்து விடும்! முடமும் ஊனமும் ஒரு புறம்!*

*விதவைகள், அநாதைகள் மற்றோரு புறம்!*

*வாழ தெரியாமலும், பல கட்டுப்பாட்டுக்குள் வாயையும், வாலிபப் பருவத்தையும் புதைத்துக் கொண்டிருக்கும் இளையோர் சமூகம் மற்றொரு புறம். நாங்கள் பொது நிலையினர், எங்களிடம் பிச்சை கேட்டு வந்து நிற்கும் அவல நிலையை யாரிடம் சொல்வது?*

TCAV - ஆம் நீங்கள் கூறியது போல அங்கு எமது இளைஞர், யுவதிகள் பொறுப்பில்லாமல் ஏற்கனவே கஷ்டப்படும் குடும்பங்களுக்கு பெரும் பாரமாகவும் வேதனையாகவும் இருப்பதாக கூருகிறார்களே.?

வண. பிதா - *பாவம் இவர்கள் தான் மிக பரிதாபத்துக்குரியவர்கள். இவர்கள் பகட்டாகவும் கவலை மறந்து பொறுப்பின்றி திரிவதாக மேலை நாட்டு தமிழ் அபிமானிகளிடம் ஒரு முறைப்பாடு இருக்கிறது.*

*இதை சமகால கண்கொண்டு நோக்க வேண்டும். நீங்கள் அங்கு சுதந்திரமா, சுதந்திரக் காற்றை அநுபாவித்ததில் 10% வீதத்தையாவது கடந்த 20 ஆண்டுகளில் அநுபவித்திருக்க மாட்டார்கள் இவர்கள். ஆனால் இயற்கை கொடுத்த வாலிப முறுக்கு மட்டும் மழுங்கி விடவேண்டுமா? அவர்களை மனிதராக்க, தன்னம்பிக்கை கொடுக்க கூடிய திறமைகளை வளர்த்து விடாமலும் சந்தர்பமும் கொடுக்காமலும் குறை கூறுவதில் என்ன நியாயம்?*

*உங்களைப் போன்றவர்களின் எழுத்தாவது மேலை நாட்டு தமிழ் அபிமானிகளிடம் இவர்களுக்கான சமூக நலன் திட்டத்தை தீட்ட துணை போகாதா என்ற ஆதங்கத்திலே தான் நான் இதை கூறுகிறேன்.*

TCAV - மன்னிக்க வேண்டும் வண.பிதா அவர்களே! இந்த கேள்விக்கு நேரடியான-பாகு பாடற்ற- தனிப்பட்ட கருத்தல்லாத ஒரு சமூகத்தின் விடியலுக்கான விடையை உங்களிடம் எதிர் பார்கிறேன்....

1. தற்போதைய நிலையில் இலங்கையின் வடபகுதியில் எந்தப் பகுதி மிக அதிகம் உதவி எதிர் பார்க்கிறது?
2. தற்போதைய நிலையில் அவசரமாக கவனிக்கப்பட அபிவிருத்திகள் தனிமனித-குடும்பம் சார்ந்ததாக அமைய வேண்டுமா அல்லது சமூக அபிவிருத்தி வேண்டுமா?
3. தற்போதைய நிலையில் அவசரமாக கவனிக்கப்பட வேண்டியவர்கள்... வாழ்வாதார உதவிகள் குடும்பங்களுக்கா? விதவைகள் மறுவாழ்வு திட்டங்களா? குழந்தைக்ள மற்றும் படிப்பு சாரந்த திட்டங்களா? இளைஞர், யுவதிகளை மேம்படுத்தும் திட்டங்களா?

வண. பிதா - *மிக கஷ்டமானதும் சங்கடத்தில் மாட்டி வைக்கக்கூடியதுமான கேள்வி இது.*

1. *அடித்துச் கூறுவேன் யாழ், வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு அல்ல. இவற்றில் பல பகுதிகளில் பாரிய இழப்புகள் ஏற்பட்டது உண்மை தான். ஆனால் இங்குள்ள தேவைகளும் உதவிகளும், உறவினர்-வெளிநாட்டு தமிழ் ஆர்வலர்களின் நன்கொடைகளாலும், அரசாங்கம் மற்றும் மாகாண சபைகளின் வழமையான அபிவிருத்தி திட்டய்களின் உதவிகளாலும் நடந்து கொண்டு தான் இருக்கிறது. நான் முன்பே கூறியது போல, இங்குள்ள தேவைகளின் அளவும், கிடைக்கும் உதவிகளும் பக்கத்தில் இல்லை என்றாலும் மனசை தேற்றிக் கொள்ளாம். ஆனால் வன்னி தான் இப்போதைய மிகப் பெரிய தேடலும் தேவைக்குரியதுமான அவல பிரதேசம். இங்கு தேவைகளோ கோடிகளில்... கிடைப்பதை எங்கு எப்படிப் பிரிப்பதென்பதே ஒரு தனி பிரச்சினை.*
2. *இரண்டுமே வேண்டும் தான்.. ஆனால் இதை நீங்கள் எதிர் பார்க்கவில்லை என்பது எனக்கு தெரியும். சமூக அபிவிருத்திகள் தான் மிக சிறந்தது. ஆனால் இவை நனவாக வருவதற்குள் நாம் எமது சமூகத்தை இழந்து விடுவோமோ என்ற பயம். கினறு வெட்டினால் 3-4 குடும்பங்கள் நன்மை அடையும், ஒரு கோழி வழர்ப்பில் ஒரு விதவை ½ வயிற்றுக் கஞ்சி குடிக்கலாம், சிறு கைத்தொழிலுக்கு பழக்கினால் ஒரு குடும்பம் தலை தூக்கும்.. ஆகவே தனிமனித தேவையை கவனிக்காமல் விட்டால் சமூகம் மிஞ்சுமா என்பது சந்தேகம் தான்.*
3. *வானத்து நட்சத்திரங்களை எண்ணச் சொல்லுகிறீர்கள், முடிவிலியின் விழிம்பு எது என்று கேட்கிறீர்கள்..? என்னிடம், தங்கள் அவலம் சொல்ல வருவோரையும், உதவி கேட்டு வருவோரையும் தேவைகளின் அடிப்படையிலே வரிசைப்படுத்தி, உதவிகளை பிரித்துக் கொடுக்கக் திணரும் என்னிடமே இந்த கேள்வியா? கடந்த 3 ஆண்டுகளாக நானே இதற்கு விடை தேடுகிறேன். மன்னிக்க வேண்டும் எனக்கு தெரியவில்லை*

TCAV - இதயத்திலே இறுக்கத்தோடு விடை பெறுகிறேன் வண.பிதா அவர்களே. மிகுந்த நன்றி. உங்கள் சேவையை கிறீஸ்து ஆசீர்வதிப்பார்

வண - நன்றி தம்பி.